செ.வெ.எண்: 276 நாள்: 1.4.2020

**தன்னார்வலர்களாக சேவையாற்ற மருத்துவர்கள், செவிலியர்கள், ஆய்வக நுட்புநர்கள், களப்பணியாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

தன்னார்வலர்களாக சேவையாற்ற மருத்துவர்கள், செவிலியர்கள், ஆய்வக நுட்புநர்கள், களப்பணியாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். இதுகுறித்து புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

கொரோனா கிருமி தொற்று உலக அளவில் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் அதனை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த சூழலில் பொதுமக்களுக்கு சேவையாற்ற தன்னார்வலர்கள் வரவேற்கப்படுகிறார்கள். குறிப்பாக சுகாதாரத்துறைக்கு மருத்துவர்கள், செவிலியர்கள், ஆய்வக நுட்புநர்கள், களப்பணியாளர்கள், தன்னார்வலர்களாக சேவையாற்ற வரவேற்கப்படுகிறார்கள்.

விருப்பமுள்ள தன்னார்வலர்கள் **httpps://pudukkottai.nic.in/covid-19** என்ற வலைதள முகவரியில் தங்களுடைய பெயர், அலைபேசி எண், கல்வித்தகுதி முதலானவற்றை பதிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**